பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

12 11 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- 2020-ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையை அனைத்து மாநிலங்களும் முழு அளவில் செயல்பாட்டுக்கு கொண்டுவர வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் வலியுறுத்தியுள்ளார்.
- நடப்பு நிதியாண்டில் 12 லட்சத்து பத்தாயிரம் கோடி ரூபாய் நேரடி வரி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளதாக மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.
- இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க நடடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார்.
- தமிழகத்தில் அடுத்த நான்கு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

[]<<<>>>[]

2020-ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மாநில மற்றும் யூனியின் பிரதேசங்களின் உயர்கல்வித்துறை செயலர்கள் கலந்து கொண்ட பயிலரங்கில் உரையாற்றிய அவர், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கு நாடு முழுவதும் கல்வித்துறையை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

புதிய கல்விக் கொள்கை ஒவ்வொரு மாநிலங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விளையாட்டு, கவிதை, நாடகம் போன்றவற்றுக்கு தொழில் ரீதியிலான அங்கீகாரத்தை புதிய கல்விக் கொள்கை அளித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

தாய்மொழியில் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை அது வழங்கி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கல்வித்துறையில் தேசிய அளவிலான சீர்திருத்தங்களை கொண்டு வரும் வகையில் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை, தேசிய கடனுதவி அமைப்பு, நுழைவுத் தேர்வு அடிப்படையிலான மாணவர் சேர்க்கை போன்றவை பெரிய அளவில் கல்வித்துறையில் மாற்றங்களை கொண்டு வரும் என்று அவர் தெரிவித்தார்.

அனைத்து மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்கும் புதிய கல்விக் கொள்கையை செயல்படுத்த முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்றும் திரு தர்மேந்திரபிரதான் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

நடப்பு நிதியாண்டில் 12 லட்சத்து பத்தாயிரம் கோடி ரூபாய் நேரடி வரி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளதாக மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.

நடப்பு ஆண்டில் 15 புள்ளி நான்கு ஒன்று சதவீதம் வரி வருவாய் கூடுதலாக கிடைத்துள்ளதாக அதன் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நடப்பு நிதி ஆண்டின் தொடக்கத்திலிருந்து இம்மாதம் பத்தாம் தேதிவரை ஒட்டு மொத்த வரி வசூல் 15 லட்சம் கோடிக்கும் அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி படகுகளை உடனடியாக விடுவிக்க விரைந்து நடடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில் கடந்த ஒன்பதாம் தேதி ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்களும், இன்று காலை நாகப்பட்னத்தைச் சேர்ந்த 12 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்திருப்பதாகக் கூறியுள்ளார்.

இலங்கை அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக கூறியுள்ள முதலமைச்சர், இதுபோன்ற கைதுநடவடிக்கைகள் மீனவர்களின்

வாழ்வாதாரத்தை சீர்குலைப்பதோடு அவர்களது குடும்பங்களுக்கும் பெரும் துயரத்தை ஏற்படுத்துவதகாவும் கூறியுள்ளார்.

கடந்த ஏழு ஆண்டுகளில் இல்லாத வகையில் நடப்பு ஆண்டில்தான் தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் அதிக அளவில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் விடுவிக்க தூதரக ரீதியில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் திரு மு க ஸ்டாலின் அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட மீனவர்களையும், அனைத்து விசைப்படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று வலியுறுத்தி ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

[]<<<>>>[]

சென்னையை அடுத்த ஆவடி மாநகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்காக கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

ஆவடி மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் விரிவாக்கத் திட்டப் பணிகளை அவர் இன்று தொடங்கி வைத்தார்.

ஏற்கனவே சுமார் 114 கோடி மதிப்பிலான குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளதாகவும், தற்போது 60 கோடி ரூபாய் மதிப்பிலான விரிவாக்க பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

*( சவுண்ட்பைட் - கே என் நேரு ) --- 45 செகண்ட்*

[]<<<>>>[]

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தப்பகுதி வடதமிழகம் - தெற்கு ஆந்திர கடற்பகுதியில் நிலை கொண்டுள்ளதாகவும், இது வலுப்பெறாது என்றும் வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அடுத்த நான்கு நாட்களுக்கு தமிழகத்தின் பெரும்பாலான பகுதியில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) --- 48 செகண்ட்*

[]<<<>>>[]

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கு மாநில அரசு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் உத்தரவின் பேரில், சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அடுத்த நான்கு நாட்களுக்கு தமிழகம் முழுவதும் மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதை அடுத்து, அதற்குத் தேவையான மோட்டார் பம்புகள், ஜெட்ரோடிங் எந்திரங்கள் உள்ளிட்ட அனைத்தும் தயார் நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தின் சார்பில் 329 நிவாரண மையங்களும், 120 உணவு தயாரிப்பு கூடங்களும் தயார் நிலையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் கணேசபுரத்தைத் தவிர மற்ற 21 சுரங்கப்பாதைகளில் இயல்பான போக்குவரத்து நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்த அனைத்து உறுதியான நடவடிக்கைகளையும் மாநில அரசு எடுத்து வருவதாக திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் சுமார் 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற பணிகளை மாநில அமைச்சர் திரு சக்ரபாணி இன்று மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் நடைபெறும் மாணவர்களுக்கான கலைத்திருவிழாவை மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி இன்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

தேனி மாவட்டம் சண்முகாநதி அணையிலிருந்து இன்று பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் மாவட்ட காவல்துறை சார்பில் ‘போலீஸ் அக்கா திட்டத்தை’ காவல்துறையின் மேற்கு மண்டல தலைவர் திரு டி செந்தில்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

சேலம் மத்திய பேருந்து நிலையத்தில் நடைபாதையை ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருந்த கடைகளை மாநகராட்சி அதிகாரிகள் இன்று அப்புறப்படுத்தினர்.

[]<<<>>>[]

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்.டையில் உள்ள உலக புகழ்பெற்ற தர்கா சந்தனக்கூடு விழாவையொட்டி மாவட்டத்திற்கு நாளைய தினம் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.,

[]<<<>>>[]

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் சிம்ரன் ப்ரீத் கவுர் வெண்கலப்பதக்கம் வென்றார்.

கலப்பு குழுப் பிரிவில் இந்தியாவின் கீர்த்தி குப்தா, Jungsher singh வெள்ளிப்பதக்கத்தையும், ஆஷிமா Ahlawat – Bakhtyarudden வெண்கலப்பதக்கத்தையும் வென்றது.

[]<<<>>>[]

ஜப்பானில் நடைபெற்று வரும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் அனிருத் சந்திரசேகர் - கலியாண்டா பூனாச்சா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*End of News*